# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1877/70 - 2014 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2014.08.29

*1877/70 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**பொரளை கோத்தமி விஹாரை புனித பிரதேசத்தினை புனித பூமியாகப் பிரகடனப்படுத்தல்**

*இலக்கம் 1681 கொண்ட 2010, நவம்பர் மாதம் 22 ஆம் திகதி, திங்கட்கிழமை அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1681/3 ஆம் இலக்கம் கொண்ட 2010, நவம்பர் மாதம் 22 ஆம் திகதி, திங்கட்கிழமை வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி மூலமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் பௌத்த சாசன மற்றும் மதவிவகாரஅமைச்சர் கலாநிதி திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள புனித பூமி திட்டமிடல் மற்றும் அபிவிருத்தித் துறை விடயம் தொடர்பாக கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் நீண்டகால பாதுகாப்புக் கருதி அந்தப் பிரதேசத்தினை புனித பிரதேசமாகவும் அதனை "பொரளை கோத்தமி விஹாரை புனித பூமி" என அறிமுகப்படுத்திக்கொள்ள முடியுமெனவும் பிரகடனப் படுத்தப்படுகின்றது.*

*கலாநிதி தி. மு. ஜயரத்ன,*
*பிரதமர், பௌத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சர்.*

*பௌத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சு,*
*இலக்கம் 135,அநகாரிக்க தர்மபால மாவத்தை,*
*கொழும்பு 07,*
*2014, ஓகத்து 20.*

**அட்டவணை**

பொரளை கோத்தமி விஹாரை புனித பூமி உள்ளடக்கும் பிரதேசம்

*நில அளவையாளர் நாயகத்தின் 2010 ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதிய இலக்கம்* C.O./THI/2010/555 *(ஆரம்ப வரைபட இலக்கம் கொ:9137) கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் 1 என குறிப்பிடப்பட்டுள்ள மேல் மாகாணத்தில், கொழும்பு நிருவாக மாவட்டத்தில், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவில், கோத்தமிபுர கிராம உத்தியோகத்தர் பிரிவில் (பிரிவு இலக்கம் 35 பொரளை தெற்கு, கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட) பொரளை எனும் கிராமத்தில் அமைந்துள்ள 0.7343 ஹெக்டேயார்ஸ் பரப்பளவு கொண்ட கீழ் குறிப்பிடப்படும் எல்லைகளைக் கொண்ட முழுப் பிரதேசம்.*

*வடக்கு :* *பாதை, குருப்பு வீதியில் வரிப்பண இலக்கம்* 69/14 *கொண்ட காணி மற்றும் பாதை;*

*கிழக்கு :* *இரண்டாம் ஒழுங்கை மற்றும் கோத்தமி வீதி;*

*தெற்கு :* *கோத்தமி வீதி, கோத்தமி வீதியின் வரிப்பண இலக்கம்* 83,83/10,81/1 *கொண்டகாணிகள்;*

*மேற்கு :* *குருப்பு வீதியில் வரிப்பண இலக்கம் தெரியாத காணி, குருப்பு வீதியில் வரிப்பண இலக்கம் தெரியாத தரிசு காணி, குருப்பு வீதியில் வரிப்பண இலக்கம்* 69/50 *கொண்ட காணி, பாதை மற்றும் குருப்பு வீதியில் வரிப்பண இலக்கம்* 69/14 *கொண்டகாணி.*

*09- 493*